
# அபிராமி அந்தாதி

## ஆய்வுரை

### 46ஆவது, 47ஆவது பாடல்கள்





வெளியீடு :

பஜனைச் சபையினர்

வழக்கம்பரை, சுழிபுரம்

1994

உ

சிவமயம்

# அபிராமி அந்தாதி ஆய்வுரை

## 46ஆவது செய்யுள்

**வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்அடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புது நஞ்சைஉண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும்
யான்உன்னை வாழ்த்துவனே.**

உலகில் பெரியவர்களாகப் போற்றுதற்குரியவர்களிடம் உள்ள பெருங்குணங்களில் மிகச் சிறந்தது கருணை. அதனால் அவர்கள் எல்லா உயிர்களிடத்தும் அன்பு பூண்டு விளங்குவார்கள். பிறர் ஏதேனும் துன்பம் இழைத்தால் அதைப் பொறுத்துக்கொண்டு அவர்களிடத்திலும் அன்பு பாலிப்பதை மிகச் சிறந்த பண்பாகக் கொள்வர் பெரியர்.

" இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு " என்று திருக்குறள் கூறுகிறது.

மக்களில் சிறந்த சான்றோர்களுக்குப் பிறர் குற்றம் பொறுத்து அருளுவது சிறந்த இலக்கணம் என்றால் எல்லாக் குணங்களும் நிரம்பியவர் என்று போற்றும் இறைவனுக்கு உள்ள கருணையை அளவெடுத்துச் சொல்ல முடியாது. அவனை அருட்கடல் என்று பெரியவர்கள் போற்றுகிறார்கள். கடல் தன்னிடம் வந்து சேரும் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு தன் இயல்பு மாறாமல் இருப்பது போல இறைவன் தன்னைப் போற்றினாலும் தூற்றினாலும் கருணை மாறாத பேராளன். தனக்குத் தீங்கு இழைக்கிறார்களே என்ற சினம் சிறிய அறிவும், சிறிய ஆற்றலுமுடைய மனிதர்களுக்கு உண்டாவது இயல்பு. இறைவனுக்கோ யாராலும் தீங்கிழைக்க முடியாது.

தாய் தன் பொல்லாத குழந்தைக்கும் உணவு வழங்குகின்றாள். பிள்ளை தன்னை வைது இழிவு செய்தாலும் அவன் நன்மை பெற வேண்டுமென்றே வேண்டுகிறாள். 'பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு' என்ற பழமொழி தாயின் அன்பை நன்கு எடுத்துக் காட்டுகிறது. தெய்வம் கருணைக்கு இருப்பிடம். தாய்

தயையின் நிலைக்களம். 'தாயிற் சிறந்த தயாவான தத்துவனே' என்று மாணிக்கவாசகர் பாடுவார். 'அன்னை தயையும்' என்பது பழம் பாட்டு.

தெய்வமே தாயாக இருந்து விட்டால் கருணை வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடும். அம்பிகை கருணையே வடிவானவள். சிவ பெருமானுடைய திருவருளையே சக்தியாக வழிபடுவது மரபு. 'அருளது சக்தியாகும் அரன்றனக்கு' என்று சாஸ்திரம் பேசுகிறது. தெய்வம் அருளுடையதாக இருப்பதனால்தான் நாம் உய்கிறோம். நாம் செய்யும் தீச்செயல்களுக்கெல்லாம் தக்கபடி தண்டனை கொடுப்பதனால் எந்தக் காலத்திலும் நாம் உய்யவே முடியாது. தெய்வம் தன் திருவருளால் நம்முடைய குறைகளை எல்லாம் மறந்து நாம் சிறிதளவு அன்பு செய்தாலும் அதைப் பெரிதாகப் பாராட்டி அருள் புரிகிறது.

நல்லவர்களை நாம் அவமதித்திருக்கிறோம். பக்தர்களை வேஷதாரிகள் என்று இழித்திருக்கிறோம். கடவுளை வழிபட்டு வாழும் பலரை நாம் நிந்தித்திருக்கிறோம். இவற்றையெல்லாம் பெரிய குற்றமாக எண்ணி நமக்குத் தண்டனை தரப்புகுந்தால் நாம் இன்னும் பல்லூழி காலம் நரகத்தில் உழல வேண்டியதுதான். அம்பிகை அப்படிச் செய்கிறதில்லை.

சிறு குழந்தைகள் தங்களுக்குள் அடித்துக்கொண்டாலும் சில சமயங்களில் அன்னையை வைதாலும் அவள் அவற்றையெல்லாம் பொருட்படுத்துவதில்லை. வேண்டிய உணவை உரிய காலத்தில் குழந்தைகளுக்கு ஊட்டுகிறாள். எப்போதாவது குழந்தையை அடித்துவிட்டால் பிறகு அதற்காக வருந்தி இறுக அணைத்துக் கொள்கிறாள்.

அன்னை அபிராமி இந்தத் தாயை விட ஆயிரம் மடங்கு கருணை உடையவள். நாம் திருந்த வேண்டும் என்றும், தன்னோடு இருந்து வாழவேண்டும் என்றும், திருவுள்ளம் கொண்டு பல பல நன்மைகளைச் செய்கிறாள். அத்தகையவளிடம் உண்மையான பக்தனுக்கு அச்சம் உண்டாகவே உண்டாகாது. 'உன்னுடைய தயை என்னைக் காப்பாற்றும்' என்ற உறுதியோடு இருப்பான்.

இத்தகைய எண்ணம் காரணமாக மேலும் மேலும் பிழை பண்ணிக்கொண்டே இருப்பவன் பக்தன் ஆகமாட்டான். 'நம்மை அறியாமலே பல தவறுகள் செய்கிறோம். நம் மனம் அறிய எந்தப் பிழையும் செய்யலாகாது. ஆனால் நம்மை அறியாதபடி தவறு நேருமானால் அம்பிகை நம்மைப் பொறுத்தருளிக் காப்பாற்றுவாள்'

என்றே உண்மைப் பக்தன் எண்ணுவான். ஆகையால் ஒவ்வொரு கணமும் மகா மாதாவை எண்ணி யாருக்கும் துன்பம் இழைக்காமல் வாழ்வான்.

பாவங்களையெல்லாம் மனம் அறியச் செய்துவிட்டு ‘பல திட்டுக்கு ஒரு முழுக்கு’ என்று அம்பிகையிடம் வந்து அவளைப் புகழ்ந்தால் அது உண்மைப் பக்தி ஆகாது. பக்தன் மிகத் தூயவனாக இருந்தாலும் எங்கே அசுத்தம் நம்மைப் பற்றி விடுமோ என்று அஞ்சுவான். சிறிய குற்றத்தைச் செய்தாலும் பெரிய குற்றத்தைச் செய்தவனைப் போல வருந்துவான். தன் குணங்களைச் சிறியனவாகவும் குற்றங்களைப் பெரியனவாகவும் காண்பது சான்றோர் இயல்பு. பக்தனும் அப்படித்தான் இருப்பான். பக்தியில் எவ்வளவு உயர்ந்தவனாக இருந்தாலும் ‘தாயே எனக்கு இன்னும் தக்கபடி பக்தி உண்டாகவில்லையே’ என்று கதறுவான். ஆழ்வார்களும், நாயன்மார்களும் பாடிய பாடல்களில் இந்த நைச்சியாநுசந்தானத்தைக் காணலாம். தீங்கைக் கண்டால் இயல்பாகவே அருவருப்பு உண்டாகும் தன்மையைப் பயிர்ப்பு என்று சொல்வார்கள். அந்தப் பண்பு அவர்களிடம் மிகுதி.

அம்பிகையை ஒரு கணம் நினையாமல் இருந்தாலும் பல யுகம் மறந்தது போலத் துடித்துப் போவார்கள் அன்பர்கள். அபிராமிப் பட்டர் சிறந்த அன்பராக இருந்தாலும் அம்பிகையின் கருணைக்கு முன்னர் தம்முடைய அன்பு எத்துணை அற்பமானது என்று எண்ணுகிறார். தாம் எத்தனையோ அபசாரங்களைப் புரிபவரைப்போல நினைத்து மறுகுகிறார். இது பிரேமையின் இயல்பு.

தாயே நான் குறைபாடு உடையவன். குற்றம் செய்வது என் இயல்பு. நீ தயையால் நிறைவுடையவள். என்னைப் பொறுத்தருள வேண்டும் என்று மன்றாடுகிறார். முதலில் பொதுவாகப் பெரியவர்கள் இயல்பு குற்றம் செய்தவர்களைப் பொறுப்பது என்று கூறியவர், அப்பால் அம்பிகையை நோக்கித் தம் குறைகளைப் பொறுத்து ஆட்கொள்ள வேண்டும் என்று கூற வருகிறார்.

வெறுப்பதற்குரிய செயல்களைத் தம்மைச் சார்ந்த அடியவர்கள் செய்தால் அவற்றைப் பெரியனவாகப் பாராட்டாமல், இவர்கள் நம்மையன்றி வேறு புகல் இல்லாதவர்கள் என்று எண்ணி அவர்கள் குற்றங்களைப் பொறுக்கும் இயல்பு பெரியவர்களுக்கு உண்டு. இது இன்று நேற்று வந்த இயல்பு அன்று. நெடுங்காலமாகக் குணங்களால் மிக்கவர்களிடம் காணப்படும் சீரிய பண்பு இது. இதை முதலில் எடுத்துச் சொல்கிறார்.

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியது அன்றே?

தம் அடியவர்கள் அவர்களை வெறுப்பதற்குரிய இயல்பை உடைய குற்றங்களைச் செய்தாலும் அவர்களைக் குணங்களால் மிக்க சான்றோர்கள் பொறுக்கும் இயல்பை மேற்கொண்டு செயல் செய்தல் புதியது அன்றே; இது நெடுங்காலமாக வந்த வழக்கம் அல்லவா? தகைமைகள் — இயல்பை உடைய செய்கைகள் பண் பாகு பெயர்.

அபிராமிப்பட்டர் தம் தாழ்வைக் கூறுவதோடு ஒரு வகை யில் அம்பிகையின் தயைக்குப் பாத்திரராவதற்குரிய உரிமை உண்டு என்பதையும் சொல்கிறார். அப்படிச் சொல்வதற்கு முன் அம்பி கையை விளிக்கிறார். தம்முடைய கருத்துக்கு அரண் செய்யும் வகையில் அம்பிகையை வருணிக்கிறார்.

அன்னை பரமசிவனுடைய வாமபாகத்தில் இணைந்திருக் கிறாள்; பொன் போன்றவள். அவளைப் பெற்றமையால் இறை வன் பொருள் படைத்த செல்வனைப் போலச் செம்மாந்து விளங்கு கிறான். இறைவன் எத்தகையவன்? அவனுடைய கருணையை அவன் திருக்கழுத்துக் காட்டுகின்றது. எல்லாரும் அஞ்சும்படி வந்த ஆலகால விஷத்தை அவன் உண்டான். அதனால் அவன் கண் டம் கறுத்தது. ஆயினும் அதை அவன் ஏற்றுக்கொண்டான். கொடிய நஞ்சையும் ஏற்றுத் தன் கழுத்தில் அழகாக அமைத்துக் கொண்ட பெருமான் அவன்.

உன்னுடைய கணவன் நஞ்சையும் ஏற்றுக்கொண்டவன் அல்லவா? அவனுடைய வாழ்வுக்குப் பொன்னாக அவனுடைய இடப்பாகத்தில் இணைந்து உறையும் தாயே! நீ கொடியவனாகிய என்னை ஏற்றுக்கொள்ளக்கூடாதா? என்று சொல்லாமற் சொல்லு வது போல இந்த விளியை அமைக்கிறார்.

புது நஞ்சை உண்டு கறுக்கும் திருமிடற்றான்
இடப்பாகம் கலந்தபொன்னே!

அப்பொழுதுதான் தோன்றிய நஞ்சாதலின் புது நஞ்சு என் றார். கொதிக்க கொதிக்க இருந்ததை அஞ்சாமல் அப்படியே விழுங்குபவனைப் போல உண்டான். அந்தக் கருணைச் செயலை அடையாளங் காட்டிக் கொண்டு விளங்குகிறது. அவனுடைய கறுத்த ஸ்ரீகண்டம் பொன்னே என்பதற்குப் பொன் போன்றவளே என்றும் திருவே என்றும் பொன்னிறம் உடையவளே என்றும் பொருள் கொள்ளலாம்.

அம்பிகை பரமசிவனுடைய செல்வமாக இருப்பவள் ஆத லின் பொன்னாக விளங்குகிறாள். லக்ஷ்மிக்கும் லக்ஷ்மிகரம் தருகி

றவள் ஆதலின் திருவாகப் பொலிகிறாள். சுவாதிஷ்டானத்தில் காகினி என்னும் திருநாமத்தோடு அம்பிகை எழுந்தருளியிருக்கும் போது பொன்னிறம் உடையவளாகக் காட்சி அளிக்கிறாள். ''பீதவர்ணா'' என்பது லலிதா சகஸ்ரநாமம்.

குற்றம் பொறுத்தல் பெரியோருக்கு இயல்பு என்று பொதுவாகக் கூறி குறிப்பாகப் பரமசிவன் செய்தது போல நீயும் செய்ய வேண்டும் என்று அம்பிகையை விளிக்கும் தொடரால் புலப்படுத்தி இறுதியில் நான் உனக்குத் தவறு செய்தாலும் உன்னை மறவாமல் வாழ்த்துபவன் என்ற உரிமையைச் சொல்கிறார்.

''தாயே நீ என்னை மறுப்பதற்குரிய அபசாரங்கள் பலவற்றைச் செய்கிறேன். ஆனாலும் உன்னையே நான் வாழ்த்துகிறேன். புகல் புகுவதற்கு அயலிடம் உண்டு என்ற எண்ணம் எனக்கு இல்லை. எனவே நீ என்னை மன்னித்து எனக்கு அருள் செய்ய வேண்டும்'' என்று தம் வேண்டுகோளைக் குறிப்பாகச் சொல்லுகிறார்.

மறுக்கும் தகைமைகள் செய்யினும்
யான் உன்னை வாழ்த்துவனே!

அடியேனை நீ மறுப்பதற்குரிய இயல்பை உள்ள செயல்களைச் செய்தாலும் அடியேன் உன்னையே வாழ்த்துவேன்.

என் அறியாமையால் நீ வெறுப்பதற்குரியவற்றைச் செய்தாலும் உன்னை வாழ்த்திப் புகலடைகிறேன்! என்றார் நீ என்னை மறுக்கும் செயல்களைப் புரிந்தாலும் நான் உன்னை நீங்காமல் உன்னையே பற்றிக்கொண்டு வாழ்த்துவேன் என்றும் பொருள் கொள்ளலாம். ''துடைக்கினும் போகேன்'' என்பது தேவாரம்.

''அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள் நினைத்தே அழும் குழவியதுவே போல் இருந்தேனே''

என்பது குலசேகரப் பெருமாள் திருவாக்கு.

குற்றம் சிறிதாக இருந்தாலும் அதைப் பெரிதாக எண்ணி மன்னிப்புக் கேட்கும் பக்தர் இயல்பும் அடியார் குறைகளை எண்ணாமல் அருள்புரியும் அம்பிகையின் இயல்பும் இந்தப் பாட்டினால் தெரியவருகின்றன.

இப்பாடலின் பலன் அம்பிகையே சரணம் என வாழ்பவர்களுக்கு வாழ்வில் எல்லா நலங்களும் கிடைக்கும். நல்லனவற்றையே தருவாள்.

நன்றி: மாவை பூண்ட மலர்

உ
சிவமயம்

# அபிராமி அந்தாதி

## 47ஆவது செய்யுள்

புலவர் திரு. கே. சந்தானராமன் M. A.

**வாழும் படியொன்று கண்டுகொண்டேன்; மனத்தேயொருவர்
வீழும் படியன்று; விள்ளும் படியன்று வேலை நிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவு பகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.**

### அ. வாழும் படியொன்று கண்டுகொண்டேன்

1. அழிவற்ற நிலையில் வாழுவதற்கு ஏதுவான மெய்ப் பொருளான ஒன்றினைக் கண்டுகொண்டேன்.

2. ''ஒன்று'' என்பதற்கு ஒன்றான மெய்ப்பொருள் ஒன்றாய் இணைந்த சிவசக்தி ஒரு வழிபாட்டு முறையான ''ஸ்ரீவித்யா'' நெறி ஒரு யோக முறையான குண்டலினி யோக நெறி என்று எல்லாம் பலவாறு பொருள் கொள்ளலாம்.

3. வாழும் — திருக்கடவூரின் கண் இருந்து வாழுகின்ற படியொன்று — சக்தியின் ஒரு வடிவமாகிய அபிராமியினைக் கண்டு கொண்டேன் எனவும் பொருள் கொள்ளலாம். காஞ்சிமுககவி தனது முகபஞ்சதியில் ''காஞ்சியில் வாழும் ஒன்று'' கம்பா நதிக் கரையில் திகழும் ஒன்று என்றெல்லாம் காமாட்சியினை ''ஒன்று'' என்ற சொல்லால் குறிக்கிறார்.

4. ''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும் எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை'' என்ற ஞானசம்பந்தர் வாக்குப்படி இம்மை மறுமையினில் சிறப்பான வாழ்வினை அடையத்தக்க ''பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை''யினைப் போற்றுகின்ற ஒரு நல்ல நெறியினைக் கண்டு கொண்டேன் என்கிறார்.

5. அபிராமிப்பட்டரின் காலத்து கரும நெறியாளர் ஓதல் ஓதுவித்தல் மற்றும் வேட்டல் வேட்பித்தல் மூலம் பொருள் ஈட்டி வசதியாய் வாழக் கற்றிருந்தனர். அதாவது பிழைக்கக் கற்றிருந்

தனர். ஆனால் அபிராமிப்பட்டரோ ஞான மார்க்கத்தினைப் பின் பற்றி வாழத் தெரிந்தவராக இருந்தார். எனவே அவர் கண்டு கொண்டது ''வாழும்படியொன்று'' ஆகிய நெறி.

6. ''ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும் என்ற திருக்குறட்படி ''ஒப்புரவு'' செய்து அதாவது சமுதாயத்திற்கு உகந்த நற்செயல்களைச் செய்து வாழ்வதே வாழ்க்கை ஆகும். அச்செயல்களைச் சமய நெறியினைப் பின்பற்றி நின்ற சான்றோர்களே பெரிதும் கடைப்பிடித்து வந்தனர் என்பது வரலாறு கண்ட உண்மை. அச்சமய நெறிபற்றி ஒப்புர வொழுகிய அபிராமிப்பட்டர் வாழும்படியொன்று'' கண்டவர். அதாவது ஒத்ததறிந்து உயிர் வாழ்ந்தவர்.

7. ''மரணமிலாப் பெருவாழ்வு'' என்று யோகிகளும் சித்தர்களும் குறிப்பிடும் ''ஜீவன் முத்த'' நிலையினை எய்திப் பின் இறைவனுடன் இரண்டறக் கலந்து வாழும் நெறியினை ''வாழும்படியொன்று என்றார்.

8. யான் பெற்ற பேறு இவ் வையமும் பெற்று வாழ வேண்டும் என்று எண்ணியதல்லாமல் அவ்வூரார் எண்ணியது போல ஏனையோர்க்குத் தீங்கு விளைத்து அவர்களை அளிக்கும் துர்தேவதை வழிபாட்டை அவர் பின்பற்றவில்லை. அவர் கண்டது தானும் பிறரும் வாழவேண்டும் என்று எண்ணிய நெறியே ஆகும்.

## ஆ. மனத்தே ஒருவர் வீழும் படியன்று விள்ளும் படியன்று

1. யான் அறிந்து கொண்ட அவ்வொன்றினைப் பிறர் மனத்தில் பதியும் படியும் விளங்கும் படியும் விரித்துரைக்கவும் இயலும் தன்மைத்தன்று என்கிறார்

2. மெய்ப்பொருளும் அதனையுணர்த்தும் சமய நெறிகளின் தத்துவங்களும் தனிமனிதன் தன்ஞானத்தால் உணரத்தக்கதே இல்லாமல் விளக்கத்தக்கதும் காட்டத்தக்கதும் அல்ல. எனவே தான் நம் முன்னோர் ''கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்'' என்றனர்.

3. தன்னந்தனி நின்ற ஒன்றினைக் கண்டுகொண்டார் அநுபூதிமான் அருணகிரிநாதர் ''அதனை இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ?'' என்று வினவுகிறார்.

4. திருக்கடவூர் மக்கள் கருதியதுபோல் அபிராமிப்பட்டர் தீய சக்திகளை வழிபடும் நெறியினை மேற்கொண்டிருந்தால் அவ் வழிபாட்டின் மூலம் பிறர் வீழ்ந்து இன்னல்படவும் எண்ணியிருக்கக் கூடும். மற்றும் அத்தகைய வழிபாடியற்றுவோர் நண்பர்களை

யும் குடும்பத்தினரையும் பிரிக்க விரும்பும் ''மித்ர பேதம்'' என்னும் பிரயோகத்தினைக் கையாளுவர். அதாவது எதிரிகள் வீழவும் விண்டுபோகவும் விரும்புவர்.

ஆனால் அபிராமிப்பட்டர் அவ்வாறு பிறர் வீழவும் விள்ளவும் (பிரியவும்) எண்ணினார் இல்லை வாழும்படி கண்டு கொண்டாரோ அன்றி வீழும் படியும் விள்ளும் படியும் விரும்பும் தாழ்ந்த நெறியான தீய சக்தி வழிபாடாற்றவில்லை என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

## இ. வேலை நிலம் ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல் சூழும் சுடக்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே

1. அவ்வொன்றாகிய மெய்ப்பொருள் ஏழுகடல்கள், ஏழு உலகங்கள் எட்டு மலைகள் முதலிய யாவற்றையும் கடந்த நிலையில் இரவும் பகலும் ஒளிவீசும் சுடருக்கு இடையில் எழுந்தருளிச் சுடர்விட்டு திகழ்கின்றது.

2. வேலைநிலம் என்பதற்குக் கடலால் சூழப்பட்ட ஏழு நிலப் பகுதிகளில் அல்லது ''சப்தத் வீபங்கள்'' என்று பொருள் கொள்வர். மற்றும் வேலை ஏழும் நிலம் ஏழும் என்றும் பொருள் கொள்வர்.

3. குண்டலினி யோகத்தில் ஏழு கடல் ஏழு நிலம் ஆகியவை மூலாதாரம் முதல் சகஸ்ராரம் ஈறாக உள்ள ஏழு நிலைகளைக் குறிக்கும். குண்டலினி தங்கும் இடமாதலால் அவற்றை நிலம் எனவும் ஸப்ததாதுக்களாகிய அமுதரஸம் தேங்கும் இடங்களாதலால் அவற்றை ஏழு கடல் எனவும் குறிப்பிடுவர்.

4. அவ்வாறே வெளி அண்டத்தில் நிடதம், ஏமகூடம் இயமம், நீலம், சுவதம். இருங்கவான் மாலியவான், கந்தமாதானம் எனக் குறிப்பிடப்படும் எட்டு மலைகள் பிண்டாண்டம் எனும் நமது உடலில் மூலாதாரம் நீங்கலான ஐந்து ஆதாரங்கள் மற்றும் பிரம்ம - விஷ்ணு - நத்ரக் கிரந்திகளாகிய மூன்று முடிச்சுக்கள் மலைகள் ஆகும். ஏன்எனில் மூலாதாரத்தினின்று எழும்பும் ஏறும் குண்டலினி சக்தி அவ்வெட்டு நிலைகளையும் கடந்து சகஸ்ராரத்தை அடைகிறது.

5. மேருவின் நடு சிகரத்தில் அம்பிகை உறைகிறாள். அம்மேருவின் எட்டுத் திக்குகளிலும் உள்ள வேறு எட்டுச் சிகரங்களில் இந்திரன் முதலான எண்மர் உறைகின்றனர் என்பர். அவ்வெண் சிகரங்களே பருவரை எட்டு. அவற்றினுக்கும் அப்பால் உள்ள மேருவின் நடுச்சிகரமே அம்பிகை ஒளிரும் நடு இடம்.

6. சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடரும் சுடர் என்பது இரவும் பகலும் சுற்றித்திரியும் சந்திர சூரியர்களுக்கு நடுவன் உறையும் சுடரனைய அன்னையினைக் குறிக்கும்.

'பானுமண்டல மத்யஸ்தா' - சூரிய மண்டலத்தின் நடுவில் இருப்பவள் எனவும் சகஸ்ரநாமம் குறிப்பிடுகிறது.

7. இரவு பகல் எப்போதும் குடகோளார்த்தம் மற்றும் குணகோளார்த்தம் இரண்டினையும் சுற்றித் திரியும் சூரியனின் நடுவில் அம்பிகை சந்திக்கடன் இயற்றும் காலங்களில் சரஸ்வதி, சாவித்திரி, காயத்திரி என்னும் தேவிகளாக எழுந்தருளுகிறாள். சுடராகிய சூரியனின் நடுவில் தானும் சுடராக - ஜோதியாக எழுந்தருளுகிறாள். உரிய காலத்தில் வேதியரொழுக்கத்துக்கேற்ற நியதிகளைப் புரியாதவரென அயலார் அபிராமிப்பட்டரை எண்ணினர். ஆனால் அவரோ சூழும் சுடர்க்கு நடுவே சுடரும் தேவியினை எக்காலமும் உள்ளே கண்டவர். அக்காட்சி வீழும்படியும் விள்ளும் படியும் உள்ள நிலையில் இல்லாததால் பிறர் அதனை அறிந்திலர்.

8. இடை பிங்கலை என்னும் இரண்டு நாடிகளுமே சூழும் சுடர்கள் என்றும் அவற்றுக்கு இடையில் சுழுமுனை நாடியில் இயங்கும் குண்டலினியே நடுவே சுடரும் சுடர் என்றும் விளக்குகிறார் உரையாசிரியர் திரு. சண்முகநாதன் அவர்கள்.

9. த்ரிகோணாந்தர தீபிகா - முக்கோணத்துள் விளங்கும் சுடர் என்று சகஸ்ரநாமம் குறிப்பிடுகிறது. ஸ்ரீசக்ரமும் சூழும் சுடர் ஆகும். ஏனெனில் பலதத்துவங்கள் சித்திதேவிகள் பரிவாரங்கள் ஆவரணங்கள் ஆகியவற்றால் சூழப்பட்டுள்ள ஸ்ரீசக்கரத்தின் நடுவில் விளங்கும் சுடர்போல் அம்பிகை வீற்றிருக்கிறாள். ஸ்ரீசக்கரத்து பிந்து மண்டலமே அச்சுடரின் நடு ஆகும். 'ஒளி நின்ற கோணங்கள் ஒன்பது' எனப் பட்டரும் குறிப்பிடுவார்.

10. அவ்வாறே சூழும் சுடர் என்பது அமுதத் தேக்கத்தால் சூழப்பட்டுள்ள மூலாதாரச் சக்கரம் ஆகும். அங்கு அன்னை குண்டலினி வடிவாய் உறங்கும் சுடராக உறைகிறாள். பின் சகஸ்ரார காலத்திலும் சூழும் சுடர்க்கு நடுவாய் ஒளிமிக்க காட்சி தருகிறாள்.

11. நாம் அறிந்த உலகங்கள், கடல்கள், மலைகள் அனைத்துக்கும் அப்பாலுள்ள ஸ்ரீநரமென்னும் நகரத்தில் சிந்தாமணி கிருஹமென்னும் வீட்டில் ஸ்ரீசக்கரமாகிய ஆசனத்தில் அன்னை அமர்ந்திருக்கிறாள். அந்த நகரினைச் சுற்றிப்பல உலோகக் கோட்டைகள்,

பல பத்மாடவிப் பிரகாரங்கள், பல பரிவார தேவதைகள் உறை யும் உலகங்கள் யாவும் சூழ்ந்திருக்கின்றன. ஒளிமிக்க அவளது இல்லமும் ஸ்ரீசக்ரமும் சூழும் சுடர்கள். அதன் நடுவில் அமரும் அவள் சுடரும் சுடர்.

12. விண்டுரைக்க இயலாத தன்மையதாய் எப்போதும் எனது குண்டலினி மார்க்கத்தில் சுடர்விட்டு எழுந்தருளித் திருக் காட்சி தந்தருளும் அவளது தரிசனம் காரணமாகவே இருளடர்ந்த அமாவாசையினைச் சுடரொளி வீசும் பௌர்ணமி என்றார். எவ் வுலகினுக்கும் எட்டாது ஆத்ம ஒளியின் - உள்ளொளியின் நடுவே காணும் அக்காட்சி அயலார் அறியும் வண்ணம் எடுத்தியம்ப இயலுமோ? அவளே விரும்பினால்தான் அதனைப் பிறர் அறியக் காட்டவியலும் என்பது குறிப்பு. மூவாயிரம் முறை காயத்ரி ஜபம் செய்ததன் பலனை எய்தல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

இப்பாடலின் பலன் அம்பிகையைச் சரணம் என வாழ்பவர் களுக்கு வாழ்வில் எல்லா நலங்களும் கிடைக்கும் என்பதாகும்.